# தேசிய கல்வி நிறுவகம்
# பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி
# முழு நேரம் 2021
# சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் மூலமாக நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம்**

கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திக்குத் தேவைப்படுகின்ற தலைமைத்துவம், மற்றும் முகாமைத்துவத்திற்கான அறிவு, தேர்ச்சிகள், மனப்பாங்குகள் என்பனவற்றை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கை நெறியில் கற்றல் செயற்பாடுகள் மற்றும், ஆய்வு ஒப்படைகள், என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பாடநெறி நடைபெறும் இடம்**

கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம், தேசிய கல்வி நிறுவகம், மீபே, பாதுக்கை.

**பாடநெறியின் காலம்**

முழு நேரம் - ஒரு வருடம், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் (மூன்று கல்வித் தவணைகள்).

இப்பாடநெறி 2021 பங்குனி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**

1. இலங்கை கல்வி நிர்வாக சேவை/ இலங்கை அதிபர் சேவை/ இலங்கை கல்வியியலாளர் சேவை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரச உதவி வழங்கும் கல்விநிறுவகமொன்றின்/ பிரிவேனாவொன்றின் / அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவக மொன்றின் தலைவராக இருத்தல்.

2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால்/ கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கல்விமாணிப் பட்டம்.

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றினால்/ கல்விநிறுவனத்தினால் பெறப்பட்ட வேறு பட்டங்களுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா/ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் / கல்வியியல் கல்லூரி டிப்ளோமா போன்ற தொழிற்றகைமைகளில் ஒன்று இருத்தல்.

3. நான்கு வருட கற்பித்தல் அனுபவமும் அதில் இரண்டு வருடங்களேனும் நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பணிகளில் ஈடுபட்டிருத்தல்.

4. இப்பாட நெறியில் கலந்து கொள்ளும் காலப் பகுதியில் தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு எந்த ஒரு பாடநெறியிலோ அல்லது வேறு பல்கலைக் கழகங்களிலோ அல்லது உயர்கல்வி நிறுவகங்களிலோ நடாத்தப்படும் எந்தவொரு பாடநெறியிலோ முழு நேரம் 2021ல் பங்குபற்றுனராக இல்லாதிருத்தல்.
5. விண்ணப்ப முடிவு திகதியன்று அடிப்படைத் தகைமைகள் யாவும் விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**பாடநெறிக்குத் தெரிவுசெய்யும் முறை :**

கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவ செய்யப்பட்ட சகல விண்ணப்பதாரிகளும் தோற்ற வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் (www.nie.lk/olcpgdem21app.aspx) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பபத்திரத்தினை நிரப்பி அனுப்புக. மேலும் தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தில் (www.nie.lk) (ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட) விண்ணப்பபடிவத்திற்கு அமைவாக சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் என்ற பெயரில் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கணக்கு இலக்கம் 7041168 ல் விண்ணப்பக் கட்டணம் ரூபா 250/- வை வைப்பில் இட்டு அதன் பற்றுச் சீட்டினையும் இணைத்து

பணிப்பாளர்,
தொழில் வாண்மை அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் திணைக்களம்,
கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மீபே சந்தி , பாதுக்கை.

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பப்பத்திரத்தினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தங்கள் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

- விண்ணப்பப் பத்திரத்தினை அனுப்பி வைக்கும் போது கடித உறையின் **இடது பக்க மேல் மூலையில் PGDEM (முழு நேரம்) – 2021** எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- தங்களது விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி:- 31.01.2021.

**கட்டணங்கள்**

- பாடநெறிக்கான கட்டணம் : 60000/-
- பதிவுக் கட்டணம் : 1000/-

  பாடநெறிக்கான முழுக் கட்டணம் பதிவின் போது செலுத்தலாம் அல்லது பாடநெறிக்கான கட்டணம் இரண்டு தவணைகளாக செலுத்தலாம்.

  1. 50% பாடநெறிக்கானபதிவின் போதும்
  2. 50% பாடநெறிக்கானபதிவின் பின் 6 மாதத்திற்குள் செலுத்தமுடியும்.

  தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் விண்ணப்பக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது.

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.
இலங்கை.